**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**CC.NO-239/2019**

**Cross Examination of CW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | கருணாநிதி | Caste: | |
| Father's name | ரெங்கன் | Calling: | விவசாயம் |
| Village | பிசானத்தூர் | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 48 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.05.2024

எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கு புதுக்கோட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தபோது 13.10.2016 அன்று சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். 26.12.2004 தேதியில் கந்தர்வக்கோட்டை காவல்நிலையத்தில் யாரிடம் புகார் கொடுத்தேன் என்று எனது முதல் விசாரணையிலோ அல்லாது எனது தனிப்பிராதிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவையோ, மனு இரசீதையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் மனுவிற்கு இரசீது கொடுக்கவில்லை.

2) 26.12.2004 ம் தேதியில் காலை 8 மணிக்கு நடந்ததாக சொல்லும் சம்பவம் குறித்து யார் யாருக்கு தெரியும் என்றோ சம்பவ இடம் என்ன என்பது குறிப்பிட்டு என்னுடைய புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான்கு நபர்களுக்கு எதிராகதான் இந்த தனிப்புகாரை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தனிப்புகாரில் குறிப்பிட்டுள்ள மதியழகன் என்பவர் எனது சகோதரியின் கணவர். பிச்சைமுத்து என்பவர் அவருடைய சகோதரர், அவர்தான் இவ்வழக்கில் நான்காவது எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 4வது எதிரிக்கு எதிராக நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்., அதிகாரிகளோடு சேர்த்து புகாரை கொடுக்கவேண்டாம் என்று கூறியதால் நான் அவர்மீது தனியாக கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் நான் நீதிமன்றத்தில் கொடுத்த புகாரில் பிச்சைமுத்துவை சேர்த்துதான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், மீண்டும் பிச்சைமுத்துவை விட்டுவிட்டு மீதமுள்ள 3 நபர்கள் மீது புகார் கொடுத்துள்ளேன்.

3) என்னிடம் காட்டப்படும் இந்த புகாரை அல்லாமல் மற்றொரு புகாரை தாக்கல் செய்துள்ளேன். நான் பிச்சைமுத்து என் மைத்துனர் என்பதால் அவருடன் சமாதானம் ஆகி காவல் அதிகாரிகள் மீது மட்டும் வழக்கினை தொடர்ந்து நடத்தி வருகிறேன் என்றால் காவல் அதிகாரிகள் தான் எனக்கு பிரதானம். 26.12.2004ம் தேதியில் எனது தங்கை கணவர் தாக்கப்பட்டது சம்மந்தமாக நான் காவல்நிலையம் சென்று தகவல் கொடுத்து காவலர்களை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான்.

4) 26.12.2004ம் தேதி எனது மைத்துனர் மதியழகன் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், கந்தர்வக்கோட்டை மருத்துவமனைக்கு சென்றுவிட்டு மேல்சிகிச்கைக்கு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரிக்கு சென்றார். காவல்நிலையத்தில் மதியழகன் புகார் கொடுத்ததாக என் புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 26.12.2004ம் தேதியில் என்னுடன் காவல்நிலையத்திற்கு யார் யார் வந்தார்கள் என்று எனது முன்விசாரணையில் மற்றும் தனிப்புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) என் தங்கையும் தங்கையின் கணவரும் தாக்கப்பட்டதாக சொல்லப்படும் சம்பவத்திற்கு நான் நேரடி சாட்சி கிடையாது என்றால் சரிதான். 26.12.2004ம் தேதிக்கு மறுநாள் காலையில் காவல்நிலையத்திற்கு 3 நபர்களை அழைத்து சென்றதாக என்னுடைய புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அந்த மூன்று நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்ற முன்விசாரணையில் அந்த மூன்று நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற முன்விசாரணையில் அந்த மூன்று நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் தற்சமயம் திசைமாற்ற வேண்டும் என்பதற்காக சொல்லியுள்ளேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) மதியழகன் கொடுத்த புகாருக்கு குற்ற எண் 500/2004 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டார்கள் என்றாலும் என்னை சமாதானம் செய்யவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை என்றாலும் சரியல்ல. எனது பெயரிலும் எனது அண்ணன்

சூரியமூர்த்தி பெயரிலும் பிச்சைமுத்து புகார் கொடுத்து அதன்பேரில் குற்ற எண் 501/2004 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதன்பேரில்நான் முன்ஜாமின் பெற்றேன் என்றால் மனுதாக்கல் செய்தேன், என் மீது வழக்கு இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. முன் ஜாமீன் பெறும் நபர் காவல்நிலையம் செல்வதற்கு வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல.

7) நான் காவல்நிலையத்திற்கு டேப் ரிகார்டுடன் சென்றதாக சொல்லும் தேதி 27.12.2004ம் தேதி என்றால் சரிதான். 03.05.2005 தேதியில்தான் காவல்கண்காணிப்பாளரிடம் இதுசம்மந்தமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், இதற்கு முன்பாக நேரடியாக காவல் ஆய்வாளரிடம் புகார் கொடுத்துள்ளேன் அதற்கு சான்றுகள் இல்லை. நான் மதியழகன் புகாரின் மீது பிரிவு 307ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யும்படி வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. காவல்துணை கண்காணிப்பாளரும், ஆய்வாளரும், காவல்கண்காணிப்பாளரும் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. எனது அண்ணன் பெயரிலும், எனது பெயரிலும் போட்ட வழக்கு உண்மைக்கு புறம்பான வழக்கு என்று இவ்வழக்கின் எதிரியாக சொல்லப்படும் ஆறுமுகசாமியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக என்னுடைய புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

8) மதியழகன் புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிச்சைமுத்துவை வழக்கிலிருந்து விட்டுவிட்டார்கள் என்றுதான் காவல்துறை மீது குற்ற சாட்டு என்றால் எனக்கு போலிசார்தான் எதிரியாக செயல்பட்டார்கள். பிரிவு 156(3) ன் கீழ் போலிசார் மீதும், பிச்சைமுத்து மீதும் வழக்கு போடும்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதன்பேரில் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பேரில் நான் எவ்வித மேல்நடவடிக்கையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

9) நான் கொடுத்த புகார் உண்மைக்கு புறம்பானது என்று இவ்வழக்கின் எதிரி ஆறுமுகசாமி இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மனுவின் மீது எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இறுதியறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்காமல் நான் புகார் மனுவை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காவல்துறையை படிய வைத்து எனது தங்கையின் வீட்டிற்கு சாதகமாக செயல்பட எத்தளித்தேன் என்றாலும் அவர்கள் உடன்படவில்லை என்பதால்தான் அவர்கள்மீது பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

10) நான் கறம்பக்குடி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் கலியபெருமாள் என்பவரை நிலையத்திலிருந்த 3 எதிரிகளை விடுவிக்க சொல்லி என்மீது கறம்பக்குடி காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு எண் சிசி 11/2010 என்று நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். கந்தர்வக்கோட்டை காவல்நிலையத்தில் கிருஷ்ணமூர்த்தி என்பவரை மற்ற நபர்களுடன் சேர்ந்து கொலைசெய்ய முயற்சி செய்ததற்காக என்மீது சார்பு நீதிமன்றத்தில் வழக்கு இருந்தது என்றால் சரிதான்.

11) 2009 ம் ஆண்டு பெருமாள் காவல்துறையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்பது தெரியுமா என்றால் தெரியும். 2012 ம் ஆண்டு என் மீது கறம்பக்குடி காவல்நிலையத்தில் குற்ற எண் 356/2012 என்று முதல்தகவல் அறிக்கை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

**(**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை **ஒத்திவைக்கப்படுகிறது.)**

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.